(2) அவையிலுள்ள சரவிளக்குகள் எரியாமை.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகின்ற இந்த நேரத்திலேயே இந்த மன்றத்தில் முறைகேடு நடந்துகொண்டிருக்கிறது. அதுவும் உங்கள் கண் முன்னாலேயே அது நடக்கிறது. அதாவது, இந்த அவையிலுள்ள சர விளக்குகள் பல எரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை; உட்காருங்கள். இந்த மன்றத்தில் எரிகிற விளக்குகள் சாதாரண கண் பார்வை உள்ளவர்களுக்கு போதும். (சிரிப்பு).

7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை விவாதம் (தொடர்ச்சி).

திரு. மா. சின்னராசு: தலைவரவர்களே, மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் அவர்களினால் அளிக்கப்பட்டிருக்கிற மின்துறை நிதிநிலை அறிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் இங்கு மட்டுமல்லாமல் எங்கும் இந்த மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. தேவையான மின்சாரத்தை நம்மால் உற்பத்திச் செய்து கொடுக்க முடியவில்லை என்று உணர்ந்திருக்கிற நாம் அதற்கான காரணங் களை அறிகின்ற நேரத்தில் இப்போது இருக்கிற உற்பத்தியை வைத்துக் கொண்டு நமது அரசு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பிரச்சனையை தீர்க்கின்ற வகையில் நல்ல முறையில் நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நம்மால் மறுக்க முடியாது.

புனல் ஆதாரங்களிலிருந்து உற்பத்தியாகிற 50 சதவீதம் மின்சார உற்பத்தி குறைந்துவிட்ட பின்னால் மீதி இருக்கிற 50 சதவீதம் மின்சாரத்தை அனல் மின் நிலையங்களிலிருந்து தான் பெறவேண்டியிருக்கிறது. இந்த 50 சதவீத மின் உற்பத்தியை வைத்துக்கொண்டு அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வது என்பது எவ்வளவு தூரம் முடியும் என்பதை நாம் அனைவரும் உணருகிறோம். அந்த நிலையில் கூட இந்த மின்சாரத் துறையை நிர்வகித்துவருகின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மக்களுக்கு சவாலாக வந்திருக்கிற பிரச்சனையை சமாளித்து வந்திருப்பதை நாம் பாராட்ட வேண்டும்.